பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

14.08.2025 7 15

வியாழக்கிழமை காலை

## தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் 79வது சுதந்திர தினத்தையொட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று இரவு 7 மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார்.

2. ஜவுளித்துறை ஏற்றுமதி 2030ஆம் ஆண்டுக்குள் 100 பில்லியன் டாலர் என்ற இலக்கை எட்டும் என்று மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

3. அவசர நிலையின்போது சிறையில் அடைக்கப்பட்ட அரசியல் கைதிகளுக்கான ஓய்வூதியத் தொகையை பீஹார் அரசு இரட்டிப்பாக்கியுள்ளது.

4. ஜம்மு-கஷ்மீர், ஹிமாச்சலப்பிரதேசம், ஆந்திர கடலோர பகுதிகளில் இன்று மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. இந்தோனேஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரண் சிங் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாட்டின் 79வது சுதந்திர தினத்தையொட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று இரவு 7 மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார்.

குடியரசுத்தலைவரின் உரை ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷனின் அனைத்து அலைவரிசைகளிலும் ஹிந்தியிலும், ஆங்கிலத்திலும் ஒலிபரப்பாகிறது.

அதைத் தொடர்ந்து குடியரசுத்தலைவரின் உரை, மாநில மொழிகளில் தூர்தர்ஷன் தொலைக்காட்சியின் பிராந்திய அலைவரிசைகளில் ஒலிபரப்பாக உள்ளது.

அத்துடன் குடியரசுத்தலைவரின் உரை ஆகாஷ்வாணியின் பிராந்திய அலைவரிகைளில் இரவு மணி 9.30க்கு மாநில மொழிகளில் ஒலிபரப்பாகும்.

<<<<>>>>

இந்தியா - சிங்கப்பூர் இடையே வர்த்தகம், முதலீடு உள்ளிட்ட துறைகளில் வலுவான கூட்டாண்மைகள் உள்ளதாக குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லி வந்துள்ள சிங்கப்பூர் துணைப் பிரதமர் திரு. கான் கிம் யோங் தலைமையிலான குழுவினர் நேற்று

குடியரசுத்தலைவர் மாளிகையில் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

இக்கூட்டாண்மை திறன் மேம்பாடு, பசுமைப் பொருளாதாரம் போன்ற துறைகளிலும் விரிவடைந்து வருவது திருப்தியளிப்பதாக அவர் கூறினார்.

ஜம்மு-கஷ்மீரின் பஹல்காமில் நிகழ்ந்த தாக்குதலைத் தொடர்ந்து பயங்கரவாதத்திற்கு எதிரான சிங்கப்பூரின் நிலையை பாராட்டுவதாக குடியரசுத்தலைவர் கூறினார்.

<<<<>>>>

நாட்டில் சூரியசக்தி மின் உற்பத்தி 100 ஜிகாவாட் திறனை அடைந்ததற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷியின் சமூக வலைதள பதிவு குறித்து சுட்டிக்காட்டியுள்ள பிரதமர், தூய்மை எரிசக்தியை பிரபலப்படுத்துவதற்கான முயற்சிகளை பாராட்டுவதாகக் கூறியுள்ளார்.

இது சுயசார்பை ஒட்டிய மற்றொரு மைல்கல் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

**<<<<>>>>**

ஜவுளித்துறை ஏற்றுமதி 2030ஆம் ஆண்டுக்குள் 100 பில்லியன் டாலர் என்ற இலக்கை எட்டும் என்று மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற தொழில் துறையினர் உடனான கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர், உலகில் நிலவி வரும் சவால்களுக்கு இடையே இந்திய ஜவுளித்துறை ஏற்றுமதி இந்த இலக்கை எட்டும் என்று கூறினார்.

ஜவுளித் துறையில் புதிய சந்தை வாய்ப்புகளை கண்டறிவதற்கும், சீர்திருத்தத்திற்கும் நான்கு குழுக்கள் அமைக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இந்தியா மீது அமெரிக்க விதித்துள்ள இறக்குமதி வரி, ஜவுளித்துறையின் எதிர்காலம் குறித்த உத்திகள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

<<<<>>>>

சுதந்திர தினத்தையொட்டி நாடு முழுவதும் இல்லந்தோறும் தேசியக் கொடி பேரணி நடைபெற்று வருகிறது.

சென்னை ஆவடியில் இன்று காலை மணி 9.30க்கும், ராயபுரம் ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் முற்பகல் மணி 11.30க்கும் இப்பேரணி தொடங்குகிறது.

இதில் மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்கிறார்.

<<<<>>>>

அவசர நிலையின்போது சிறையில் அடைக்கப்பட்ட அரசியல் கைதிகளுக்கான ஓய்வூதியத் தொகையை 7 ஆயிரத்து 500 ரூபாயில் இருந்து 15 ஆயிரம் ரூபாயாக பீஹார் அரசு உயர்த்தியுள்ளது.

இம்முடிவிற்கு முதலமைச்சர் திரு. நிதிஷ் குமார் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அதன்படி ஒரு மாத காலத்தில் இருந்து 6 மாத காலம் வரை சிறையில் இருந்தவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 7 ஆயிரத்து 500 ரூபாய் உதவித் தொகை 15 ஆயிரம் ரூபாயாகவும், 6 மாதத்திற்கு மேல் சிறையில் இருந்தவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 15 ஆயிரம் ரூபாய் ஒய்வதியத் தொகை 30 ஆயிரம் ரூபாயாகவும் அளிக்கப்பட உள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் கடந்த 4 ஆண்டுகளில் ஒன்று புள்ளி எட்டு மூன்று கோடி மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக மாநில உணவுத்துறை அமைச்சர் திரு. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இதன்மூலம் விவசாயிகளுக்கு 40 ஆயிரத்து 440 கோடி ரூபாய்

வழங்கப்பட்டுள்ளதாகவும், இதில் மாநில அரசின் ஊக்கத்தொகையாக ஆயிரத்து 816 கோடி வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

நடப்பு நெல் கொள்முதல் பருவத்தில் இதுவரை 46 புள்ளி 5 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டும் செப்டம்பர் மாதம் முதல் நெல் கொள்முதல் செய்ய மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதாகவும் மாநில அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

அனைவருக்கும் வங்கிக் கணக்குத் திட்டம், அடல் ஓய்வூதியத் திட்டம் மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் குறித்து மக்கள் அறிந்துகொள்ளும் வகையில்

தமிழகத்தின் அரியலூர் மாவட்டத்தில் சிறப்பு முகாம் நடைபெற்றது.

இந்த விழிப்புணர்வு முகாமில் நிதி சார்ந்த சமூக பாதுகாப்பு திட்டங்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டதாக பாரத் ஸ்டேட் வங்கி மண்டல மேலாளர் திரு. ஜவஹர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்

(Voice Byte - Jawahar - 27 Sec)

இம்முகாம் மூலம் ஆயுள் காப்பீட்டுத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்து தாங்கள் அறிந்துகொண்டதாக பயனாளிகள் தெரிவித்தனர்.

(Voice Byte - Public - 42 Sec)

**<<<<>>>>**

ஜம்மு-கஷ்மீர், ஹிமாச்சலப்பிரதேசம், ஆந்திர கடலோர பகுதிகளில் இன்று மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மத்தியப்பிரதேசத்தின் கிழக்குப் பகுதி, உத்தராகண்ட் ஆகிய மாநிலங்களில் அடுத்த 5 நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவித்துள்ளது.

பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், உத்தரப்பிரதேச மாநிலங்களில் நாளை மறுநாள் வரை கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக தெரிவித்துள்ளது.

சத்தீஸ்கர், பீஹார் மாநிலத்தில் வரும் 19ஆம் தேதி வரையும், ஒடிசாவில் வரும் 17ஆம் தேதி வரையும் மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

பீஹாரில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் 10 மாவட்டங்களைச் சேர்ந்த 25 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாகல்பூர், பெகுசராய், முங்கர், போஜ்புர், பட்னா, வைஷாலி ஆகிய பகுதிகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையே அங்கு நடைபெற்று வரும் நிவாரணப் பணிகள் குறித்து அதிகாரிகளுடன் முதலமைச்சர் திரு. நிதிஷ்குமார் ஆய்வு செய்தார்.

மக்களுக்குத் தேவையான உணவு மற்றும் தங்குமிட வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு அவர் அறிவுறுத்தினார்.

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுவதற்காக தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படையைச் சேர்ந்த 16

குழுக்கள் அங்கு சென்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தெலங்கானாவில் பெய்த கனமழை காரணமாக நேற்று ஹைதராபாதில் விமானப் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

8 விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டன.

<<<<>>>>

இந்தோனேஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரண் சிங் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் அவர், இந்தோனேஷியாவின் Lucky Kurniawan-ஐ 6-3, 6-2 என்ற செட் கணக்கில் வென்றார்.

------------

சென்னை கிராண்ட் மாஸ்டர் செஸ் போட்டியின் மாஸ்டர்ஸ் பிரிவில் 7வது சுற்று முடிவில் இந்தியாவின் அர்ஜுன் எரிகைசி, கார்த்திகேயன் முரளி ஆகியோர் தலா 4 புள்ளிகள் பெற்றுள்ளனர்.

சேலஞ்சர்ஸ் பிரிவில் இந்தியாவின் பிரனேஷ் ஐந்தரை புள்ளிகளையும், அபிமன்யு புரானிக் ஐந்து புள்ளிகளையும் பெற்றுள்ளனர்.

மாஸ்டர்ஸ் பிரிவின் 7வது சுற்று ஆட்டத்தில் அர்ஜுன் எரிகைசி - நெதர்லாந்தின் அனீஸ் கிரி இடையேயான போட்டி டிராவில் முடிவடைந்தது.

சேலஞ்சர்ஸ் பிரிவின் 7வது சுற்றுப் போட்டியில் இந்தியாவின் ஆர்யன் சோப்ரா - அபிமன்யு புரானிக் இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

<<<<The End>>>>